# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.116/2024**

Name : செல்வமணி (PW1)

**Date:** 26.03.2026

எதிரிகள் ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

புகாரை நான் எழுதினேன். நான் நடந்ததை தான் புகாராக எழுதினேன். சம்பவ இடத்தில் கோவில், கடைகள், வீடு ஆகியவைகள் உள்ளது என்றால் சரிதான். நான் அளித்த புகாரில் எதிரிகள் வந்ததாக சொல்லும் வாகனத்தின் பதிவு எண் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அந்த வாகனம் பதிவு எண். TN 69 1300 மஞ்சள் கலர் டியோ வாகனமாகும். மேற்படி விபரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது சம்பவ சாலையில் யாரும் இல்லையா என்றால் யாரும் இல்லை, இருவரில் பச்சை கலர் சட்டை போட்ட ஒரு எதிரி என்னை நோக்கி வந்து செயினை பிடிங்கி கொண்டு சத்தம் போட்டால் கொன்று விடுவேன் என்று சொல்லி விட்டு, இன்னொரு எதிரி கருப்பு கலர் டி சர்ட் போட்ட எதிரி டியோ பைக்கில் நின்றுகொண்டிருந்தார். அதில் ஏறி இருவரும் சென்றுவிட்டார்கள்.

2. இவ்வழக்கிற்கு முன்பாக இவ்வழக்கின் எதிரிகளை நான் பார்த்ததில்லை என்றால் பார்த்ததில்லை. எனக்கு பின்னால் இருந்து செயினை பிடிங்கினார்கள் என்றால் ஆமாம். அதனால் என்னால் அவர்கள் முகத்தை பார்த்திருக்க முடியாது என்றால் இல்லை, நன்றாக முகம் தெரிந்தது, சத்தம் போட்டு என்னை மிரட்டி விட்டு தான் சென்றார்கள். பின்னால் நடந்த சம்பவம் பற்றி முன்னால் எனக்கு முகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளை யாரும் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான், அவர்கள் நிற்காமல் வேகமாக சென்றததால் பார்ப்பதற்கு வாய்ப்பில்லை. எதிரிகளை யாரென்று தெரியாததால் எதிரிகளை போலீஸார் அடையாளம் காட்ட இவ்வழக்கில் எதிரிகளை குறிப்பிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. சம்பவ சமயத்தில் 2ம் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றும், போலீஸார் அடையாளம் காட்டியதின் பேரில் தான் பொய்யாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.26 05:03:11 +0530